Wondershare PDFelement

அனைத்து உரிமைகளும் பெற்றது

# மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விஆணைக்குழு

## அறிவுசார் கணிப்பீடு – ஜூலை 2022

## அழகுக்கலை நிபுணர்

## தேசிய தொழிற்தகைமை மட்டம் 04

நேரம்: 1 ½ மணித்தியாலங்கள்

<u>பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்</u>

- அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.
- 1 தொடக்கம் 50 வரையான வினாக்கள் தொடர்பாக தரப்பட்டுள்ள (a), (b), (c), (d) ஆகிய விடைகளுள் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினை தேர்வு செய்க.
- வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் உங்களால் தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு வினாக்களுக்குமான விடைகளுக்குரிய இலக்கத்தில் (x) என்ற அடையாளத்தினை இடுக.
- இவ் வினாத்தாள் 08 பக்கங்களைக் கொண்டுள்ளது.

---

## <u>பகுதி 1</u>

1. பின்வருவனவற்றுள் எது உயிரற்ற மேற்பரப்புக்களில் நுண்ணங்கிகளின் வளர்ச்சியைத் தடுக்கின்றது?
    a) உலர் தொற்றுநீக்கிகள் (Dry sanitizers)
    b) கிருமி நாசினிகள் (Disinfectants)
    c) தொற்று நீக்கிகள (Antiseptics)
    d) நுண்ணுயிர் கொல்லிகள (Antibiotics)

2. நகப்பராமரிப்பினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் நகத்தினை சுத்தம் செய்யும் போது தூரிகை பயன்படுத்தப்படும் திசையானது
    a) மேல்நோக்கி இருத்தல் வேண்டும்
    b) வளையமாக அருத்தல் வேண்டும்
    c) கீழ் நோக்கி இருத்தல் வேண்டும்
    d) பக்கவாட்டில் இருத்தல் வேண்டும்

3. இயற்கையில் பலவீனமான நகங்களை வலுப்படுத்துவதற்கு ஒரு நக தொழில்நுட்பவியலாளராக பின்வருவனவற்றுள் எதனைப் பயன்படுத்தலாம்?
    a) துணிச்சுருள்
    b) நெயில் பிறைமர்
    c) அசற்றோன்
    d) அக்கிரிலிக் திரவ பிறைமர்

4. பாத பராமரிப்பு சிகிச்சையினை மேற்கொள்ளும் போது பிரயோகிக்கப்படும் மெல்லிய அழுத்தம் (Effleurage) ஆவது,
    a) கை முட்டியினால் பிரயோகிக்கப்படும் அழுத்தம்
    b) மென்மையான தொடர்ச்சியான அழுத்தங்கள்
    c) மேல் நோக்கிய மற்றும் கீழ் நோக்கிய அழுத்தங்கள்
    d) பாதத்திற்கு வழங்கப்படும் மெல்லிய தட்டுதல்கள்

Wondershare PDFelement

5. சீழ் பின்வருவனவற்றுள் எதன் அறிகுறியாகும்?
   a) தொற்றுநோய்
   b) பெற்றுக்கொண்ட நிர்ப்பீடனம்
   c) இயற்கையான நிர்ப்பீடனம்
   d) கிருமித்தொற்று

6. பக்ரீறியா மற்றும் வைரஸ்களிற்கிடையிலான வேறுபாடுகளில் ஒன்று பக்ரீறியாவானது,
   a) சுயமாக வாழக்கூடியது
   b) கலங்களின் பகுதியாக மாற்றமடையும்
   c) நுண்ணுயிர் கொல்லிகளிற்கு எதிர்ப்புத்தன்மையினைக் காட்டும்
   d) கலங்களினுள் ஊடுருவும்

7. UV ஜெல் தயாரிப்புகள் பொதுவாக பொதி செய்யப்படுவது ஒளி ஊடுருவ முடியாத கொள்கலன்களில் அல்லது
   a) கண்ணாடி போத்தல்களில்
   b) தெளிவான பிளாஸ்ரிக் போத்தல்களில்
   c) பிளாஸ்ரிக் பைகளில்
   d) அழுத்தும் குழாய்களில்

8. ஒவ்வொரு பாத பராமரிப்பு சிகிச்சையின் பின்னரும் பராமரிப்பு நிலையத்தினை முறையாக தொற்று நீக்கம் செய்யும் அடிப்படையான படிமுறைகள் யாவை?
   a) நீர் மற்றும் அசுத்தங்களை அகற்றுதல், நீர் மற்றும் சவர்க்காரம் இடுதல், கழுவுதல் மற்றும் உலர்த்துதல்
   b) நீர் மற்றும் அசுத்தங்களை அகற்றுதல், மேற்பரப்பினை சுத்தம் செய்தல், அங்கீகரிக்கப்பட்ட தொற்றுநீக்கியினால் தொற்றுநீக்கம் செய்தல், கழுவுதல் மற்றும் உலர்த்துதல்
   c) நீரை அகற்றுதல், அங்கீகரிக்கப்பட்ட தொற்றுநீக்கியினால் தொற்றுநீக்கம் செய்தல், கழுவுதல் மற்றும் உலர்த்துதல்
   d) நீரை மாற்றுதல், சவர்க்காரம் இடுதல், அங்கீகரிக்கப்பட்ட தொற்றுநீக்கியினால் தொற்றுநீக்கம் செய்தல், நன்றாக கழுவுதல் மற்றும் உலர்த்துதல்

9. சிறந்த ஆரோக்கியத்திற்கு அவசியமான பிரதானமான கூறுகளில் ஒன்று:
   a) சரியான உணவு
   b) முறையான பயிற்சி
   c) சரியான உடை
   d) இணைந்து வேலை செய்பவர்களின் முறையான அறிவு

10. தோலின் நுண்ணறைகளினுள் சிக்கியுள்ள கடினமான சீபத்தினை மென்மையாகவும் குழம்பாகவும் மாற்றும் செயன்முறை:
    a) அழுத்துதல் சிகிச்சை (Massage therapy)
    b) அயன்ரோபோறசிஸ் (Iontophoresis)
    c) டிஸ் இன்கிறஸ்ரேசன் (Désincrustation)
    d) மின் சிகிச்சை (Electro therapy)

Wondershare PDFelement

Wondershare PDFelement

11. செதில்களை கொண்ட பாதங்களுக்கு பொதுவாக சலூன்களில் ………………………….. சிகிச்சை தேவைப்படும்.
    a) தினசரி
    b) வாராந்த
    c) மாதாந்த
    d) வருடா வருடம்

12. கை மற்றும் கால் பராமரிப்புகளை மேற்கொள்ளும் போது மசாஜ் செய்வதன் பிரதானமான குறிக்கோள்:
    a) நிணநீர் திரவங்களை அகற்றுதல்
    b) தசைகளை தூண்டுதல்
    c) வலி நிவாரணம்
    d) தளர்வு

13. நகத்தட்டுகளில் காணப்படும் இறந்த இழையங்களை மென்மையாக்குவதற்கும் கரைப்பதற்கும் என வடிவமைக்கப்பட்ட உற்பத்தி பொருள் பின்வருவனவற்றுள் எது?
    a) ஈரலிப்பாக்கும் லோசன்
    b) அசற்றோன் அல்லாத அகற்றி
    c) அசற்றோன் அகற்றி
    d) மேற்றோல் அகற்றி

14. ஒரு …………………….. பவுண்டேஷன் உலர் சரும வகைகளிற்கு ஏற்றதாகவும் அழுத்தமான தோற்றத்தினை வழங்கக்கூடியதாகவும் இருக்கும்.
    a) நீரை அடிப்படையாகக் கொண்ட
    b) கிறீம்
    c) தூள்
    d) ஜெல்

Wondershare PDFelement

15. ஓர் …………………….. நிறமானது வாடிக்கையாளரின் தோலின் நிறத்தினை விட ஐதாகவும் எந்தவொரு முடிவையும் தரக்கூடியதாகவும் இருக்கும்.
    a) அடிப்படையான
    b) எதிரான
    c) நடுத்தரமான
    d) முன்னலைப்படுத்தப்பட்ட

16. தொழில்முறையான ஒப்பனை தூரிகைகளை சுத்தம் செய்வதற்கு ஒரு மென்மையான ஷாம்பூ அல்லது தூரிகைத் திரவம் பயன்படுத்தப்படுவதுடன் தூரிகையானது பூணுடன் ஓடும் நீரில் வைக்கப்படும் விதமாவது,
    a) வெளிப்புறம் நோக்கி
    b) மேல் நோக்கி
    c) கீழ் நோக்கி
    d) அகற்றிய பின்

17. மூன்றாம் நிலை வர்ணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் இரண்டாம் நிலை வர்ணத்துடன் சம அளவில் கலக்க வேண்டியது
    a) நிறச்சக்கரத்தில் அதன் அருகில் உள்ள அடிப்படை வர்ணம்
    b) நிறச்சக்கரத்தில் அதற்கு எதிராக உள்ள அடிப்படை வர்ணம்
    c) மற்றுமொரு ஒரு இரண்டாம் நிலை வர்ணம்
    d) அதன் நிரப்பு வர்ணம்

Wondershare PDFelement

18. பின்வருவனவற்றுள் எந்த கண்ணின் நிறம் நடுநிலையானது என கருதப்படுவதுடன் எந்தவொரு ஒப்பனை வர்ணத்திற்கும் பொருந்தக்கூடியதாக காணப்படும்?
    a) பச்சை
    b) பிரவுண்
    c) ஹேசல்
    d) நீலம்

19. ஒப்பனை நிலையத்தின் பகுப்பாய்வுப் பகுதியில் வர்ணத்தினை மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய மிகச்சிறந்த வகையான ஒளியாவது
    a) இன்கான்டசன்ற் விளக்கு (Incandescent light)
    b) LED விளக்கு (LED light)
    c) புளோரோசன்ற் விளக்கு (Fluorescent light)
    d) இயற்கை ஒளி (Natural light)

20. குட்டையான மற்றும் தட்டையான மூக்கினை மறைப்பதற்கு ஒரு ஐதான வர்ண பவுண்டேஷன் பனயப்படுத்தப்படுவது
    a) மூக்கின் பக்கப்புறங்களிலும் கன்னம் மற்றும் மூக்கின் முடிவிலும்
    b) மூக்கின் நடுப்பகுதிக்கு கீழாகவும் மூக்கின் நுனிப்பகுதியிலும்
    c) மூக்கின் பக்கப்புறத்திலும் மூக்கு துவாரத்திலும்
    d) மூக்கின் பக்கப்புறங்களிலும் முகத்தின் சிரிப்பு கோடுகளிலும்

21. கட்புருவத்தினை வளைக்கும் போது புருவ வளைவின் மிக உயரமான பகுதி காணப்படவேண்டியது கண்மணியின் வெளிவட்டத்திலிருந்து,
    a) மேலாக
    b) கண்ணின் வெளிமூலைப்பகுதி வரையில்
    c) மூக்கின் வெளிமூலைப்பகுதி வரையில்
    d) மூக்கின் நடுப்பகுதி வரையில்

22. சிவப்பு நிறமானது ................. இனை அடிப்படையாக கொண்டுள்ள போது அது ஒரு குளிர்ந்த நிறமாகும்.
    a) செம்மஞ்சள்
    b) மஞ்சள்
    c) பொன்
    d) நீலம்

23. .......................... இன் பயன்பாடானது தனித்துவமான தோற்ற இயல்புகள் வெளிக்காட்டப்படுவதை மட்டுப்படுத்துவதால் அவை குறைந்தளவிலேயே கவனத்தைக் கவரும்.
    a) ஹைலைட்ஸ்
    b) நிழல்கள்
    c) பிரகாசமான வர்ணங்கள்
    d) பிரகாசமான நிழல்கள்

24. வினைத்திறன்மிக்க ஒப்பனைப் பிரயோகத்தின் நோக்கம் யாது?
    a) சுருக்கங்கள் அல்லது கோடுகளை மறைப்பதற்கு
    b) குறிப்பிட்ட நியமத்திற்கு அமைவாக வாடிக்கையாளரின் தோற்றத்தினை மீளத் தோற்றுவித்தல்
    c) வாடிக்கையாளரின் முகத்தில் சிறந்த நிறத்தினை ஏற்படுத்தல்
    d) வாடிக்கையாளரின் தனிததுவத்தினை அதிகரித்தல்

Wondershare PDFelement

Wondershare PDFelement

25. ஒரு வாடிக்கையாளரிற்கு அண்மையாக கண்கள் காணப்படுமாயின், ஐ-ஷடோ வினை ஐதாக பிரயோகிக்க சிபாரிசு செய்யப்பட்டிருப்பது:
    a) கண்ணின் மேல் பகுதியில் இருந்து மேல்நோக்கி
    b) கண்ணின் உட்புற விளிம்பில் இருந்து மூக்கினை நோக்கி உட்புறமாக
    c) கண்ணின் வெளிப்புறம் இருந்து மேல் நோக்கி
    d) கண்ணின் கீழ்புற விளிம்பில் இருந்து கீழ் நோக்கி

26. ஒரு வாடிக்கையாளர் சதுரமான முகத்தினைக் கொண்டிருப்பாராயின் அவருக்கு சிபாரிசு செய்யக்கூடியது
    a) கட்புருவ முடிவில் உயர் வளைவினை உருவாக்குவதற்கு
    b) கட்புருவங்களை ஓரளவு நேராக்குவதற்கு
    c) புருவங்களிற்கு இடையிலான இடைவெளியினை அதிகரிப்பதற்கு
    d) புருவத்தின் வெளிப்புற விளிம்புகளை சீாக்குவதற்கு

27. கண்ணின் கருவளையங்கள், கரும் புள்ளிகள் மற்றும் ஏனை குறைபாடுகளை மறைப்பதற்கு பயன்படுத்தக்கூடிய அடர்த்தியான மற்றும் அழுத்தமான பவுண்டேஷன் பின்வருவனவற்றுள் எது?
    a) முகப் பவுடர் (Face powder)
    b) கொன்சீலர் (Concealer)
    c) கேக் மேக்கப் (Cake makeup)
    d) கிறீஸ் பூச்சு (Grease paint)

28. கோட்பாட்டு நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படும் பாரமான ஒப்பனையானது
    a) கேக் மேக்கப் (Cake makeup)
    b) பவுண்டேஷன் (Foundation)
    c) கொன்சீலர் (Concealer)
    d) கிறீஸ் பூச்சு (Grease paint)

29. பின்வருவனவற்றுள் அடிப்படை ஒப்பனை (base makeup) எனப்படுவது யாது?
    a) பவுண்டேஷன் (Foundation)
    b) நிற பிறைமர் (Color primer)
    c) கன்னத்தின் நிறம் (Cheek color)
    d) லிப் லைனர் (Lip liner)

30. கன்னத்திற்கு இயற்கையாக தோன்றக்கூடிய பளபளப்பை வழங்குவதற்கு அடிப்படையாக பயன்படுத்தப்படுவது பின்வருவனவற்றுள் எது?
    a) கிறீஸ் பூச்சு (Grease paint)
    b) நிற பிறைமர் (Color primer)
    c) பவுண்டேஷன் (Foundation)
    d) பிளஷர் (Blusher)

31. கண் இமை முடிகளை (eyelashes) அழுத்தமாகவும், அமைப்பாகவும் மற்றும் அடர்த்தியாகவும் மாற்றுவதற்கு பயன்படும் அலங்காரத் தயாரிப்பு பின்வருவனவற்றுள் எது?
    a) ஐ-ஷாடோ (Eye shadow)
    b) ஐ-லைனர் (Eyeliner)
    c) மஸ்காரா (Mascara)
    d) கொன்சீலர் (Concealer)

Wondershare PDFelement

Wondershare PDFelement

32. பவுண்டேஷனை பிரயோகிப்பதற்கு முன்னர் தோலின் வெளிறிய தன்மையினை மாற்றுவதற்கும் மற்றும் மறைப்பதற்கும் தோலிற்கு பிரயோகிக்கப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   a) நிற பிறைமர் (Color primer)
   b) கேக் மேக்கப் (Cake makeup)
   c) கன்னத்தின் நிறம் (Cheek color)
   d) முகப் பவுடர் (Face powder)

33. . ………………… ஆனது ஒரு கனியுப்பு அல்லது நிறமூட்டி மற்றும் இதிலிருந்தே நிறப்பொருட்கள் தோன்றுகின்றன.
   a) ரோன் (Tone)
   b) லேக் (Lake)
   c) புளொட் (Blot)
   d) மற் (Matte)

34. கண் பிரதேசத்தில் இருந்து கிளென்சர் இனை அகற்றும் போது, ஈரமான ஒப்பனைப் பஞ்சு அல்லது நூல் துணியினால் அது மேற்கொள்ளப்பட வேண்டியது
   a) மேல் நோக்கிய மற்றும் வெளிநோக்கிய அசைவுகள் மூலம்
   b) கீழ் நோக்கிய மற்றும் குறுக்கான அசைவுகள் மூலம்
   c) பின் மற்றும் முன்னான அசைவுகள் மூலம்
   d) வட்டமான அசைவுகள் மூலம்

35. உருப்பெருக்க விளக்கின் உதவியுடன் தோற் பரிசோதனையினை மேற்கொள்ளும் போது தொழில்நுட்பவியலாளர் பின்வருவனவற்றுள் எது இருக்கிறதா அல்லது இல்லையா என முதலில் பார்த்தல் வேண்டும்:
   a) மூடிய கொமிடோன்ஸ் (Closed comedons)
   b) புலப்படக்கூடிய துளைகள் (Visible pores)
   c) ஆவியாகிய கலங்கள் (Evaporated cells)
   d) எண்ணைத்தன்மையான சரும பகுதிகள் (Oily skin areas)

36. சுருங்கிய மற்றும் சிறிய கோடுகளுடன் கூடிய உரிந்த அல்லது உலர்ந்த மற்றும் சிறிய துளைகளைக் கொண்ட தோல் ஆனது வகைப்படுத்தப்படுவது?
   a) நீரகற்றப்பட்ட தோலாக
   b) எண்ணைத்தன்மையான தோலாக
   c) சாதாரணமான தோலாக
   d) உணர்திறன் மிக்க தோலாக

37. எண்ணைத்தன்மையான சருமம் அல்லது அதிகளவு சீபத்தனை உற்பத்தி செய்யும் சருமம் பளபளப்பாக அல்லது ஒட்டும் தன்மையுடையதாக காணப்படலாம் அத்துடன் அது:
   a) சமனான துளை பரம்பலைக் கொண்டிருக்கும்
   b) சிறிய துளைகளைக் கொண்டிருக்கும்
   c) செதில்களைக் கொண்டிருக்கும்
   d) பெரிய துளைகளைக் கொண்டிருக்கும்

38. சீழ் தலைகளைக் (pus heads) கொண்டிராத சிவப்பு நிற முகப்பருக்கள் எவ்வாறு குறிப்பிடப்படும்
   a) எலாஸ்ரின் பருக்கள் (elastin pimples)
   b) அக்னி பருக்கள் (acne pimples)
   c) சீழ்க்கட்டிகள் (pustules)
   d) மோல் (moles)

Wondershare PDFelement

39. சூரிய வெளிச்சம் படுவதனால் அல்லது ஓமோன் சமநிலையின்மையினால் தோலில் இருண்ட நிற பிரதேசங்கள் தோற்றுவிக்கப்படும் நிலைமை பின்வருவனவற்றுள் எது?
    a) ஹைப்பரைக்கோசிஸ் (Hypertrichosis)
    b) அக்னி (Acne)
    c) நீரிழப்பு (Dehydration)
    d) உயர்நிறப் பொருளாக்கம் (Hyperpigmentation)

40. தொடர்ச்சியாக அல்லது அடிக்கடி முகம் சிவக்கும் அறிகுறியினைக் கொண்ட நாட்பட்ட மரபுவழி நோய் பின்வருவனவற்றுள் எது?
    a) ரொசாசியா (Rosacea)
    b) ரீனியா (Tinea)
    c) அக்னி (Acne)
    d) அல்பினிசம் (Albinism)

41. ஒப்பனைக் கலைஞர்கள் கீழ்வரும் எதன் மேற்பரப்பில் உள்ள இறந்த கலங்களை அகற்றுவதற்குரிய தயாரிப்புக்களை மாத்திரம் பயனபடுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்:
    a) Subcutaneous tissue
    b) Stratum dermis
    c) Stratum corneum
    d) Dermal layer

42. …………….. ஆனது ஈரலிப்பானாக அல்லது சூரிய வெளிச்ச தடையியாகப் பயன்டுத்தப்படும் ஓர் மிகவும் செறிவான தோல் உற்பத்திப் பொருளாகும்,
    a) கோமேஜ் (Gommage)
    b) ரொனிக் (Tonic)
    c) மாஸ்க் (Mask)
    d) சீரம் (Serum)

Wondershare PDFelement

43. பின்வருவனவற்றுள் எந்த மசாஜ் அசைவானது, சீரான முறையில் விரலினால் மென்மையாகவும் தொடர்ச்சியாகவும் அழுத்தும் அசைவுகளை உள்ளடக்கியுள்ளது?
    a) ரப்பொற்மென்ற் (Tapotement)
    b) பெற்றிசேஜ் (Petrissage)
    c) நீடிங் (Kneading)
    d) எபிலியுரேஜ் (Effleurage)

44. இழையத்தினை பிடித்து மென்மையாக உயர்த்தி பரவலாக்கும் மசாஜ் வடிவம் பின்வருவனவற்றுள் எது?
    a) புல்லிங் (Fulling)
    b) ரோலிங் (Rolling)
    c) பிறிக்சன் (Friction)
    d) சக்கிங் (Chucking)

45. மசாஜ் இன் மிகவும் தூண்டக்கூடிய வடிவம் எது?
    a) புல்லிங் (Fulling)
    b) ஸ்ரோக்கிங் (Stroking)
    c) ரப்பொற்மென்ற் (Tapotement)
    d) சக்கிங் (Chucking)

Wondershare PDFelement

46. நீரில் கரையக்கூடிய தயாரிப்புகள் கல்வனிக் மின்னோட்டம் மற்றும் கீழ்வரும் ஒரு செயன்முறையின் மூலம் தோலினுள் ஊடுருவும். அச் செயன்முறையாவது,
    a) அயன்ரோபோறசிஸ் (Iontophoresis)
    b) மைக்கிரோ பெனிற்றேசன் (Micro penetration)
    c) கதோடைசேசன் (Cathodization)
    d) எக்ஸ்றாக்சன் (Extraction)

47. உணர்திறன் மிக்க சருமத்திற்கு கடுமையான ஸ்கிரப் (scrub) இனை பயன்படுத்தினால் அது,
    a) சிவப்பு நிறமாக மாறும்
    b) பெரும்பாலும் வாடிக்கையாளரின் பேஸ் மேக்கரை (pacemaker) பாதிக்கும்
    c) கடுமையான கொப்பளங்களைத் தோற்றுவிக்கும்
    d) தொற்று நோயினை ஏற்படுத்தும்

48. சூரிய ஒளியினால் பாதிப்படைந்த தோல் பொதுவாக தவறாக கருதப்படுவது?
    a) உணர்திறன் மிக்க தோல்
    b) அழற்சி மிக்க தோல்
    c) வயதான தோல்
    d) குறைந்தளவான நிறப்பொருட்களையுடைய தோல்

49. பகலில் பாவிக்கும் உற்பத்திப் பொருட்களுடன் ஒப்பிடும் போது இரவு சிகிச்சை முறை வழமையாக,
    a) ஐதாக காணப்படும்
    b) சம வலிமை உடையதாக இருக்கும்
    c) குறைந்த தீவிரம் உடையதாக இருக்கும்
    d) அதிக தீவிரம் உடையதாக இருக்கும்

50. மசாஜ் செய்வதனால் கிடைக்கும் பிரதானமான நன்மைகளில் ஒன்று?
    a) வாடிக்கையாளரின் தோலை இறுக்கமாக்கும் மற்றும் துளைகளைத் திறக்கும்.
    b) சிகிச்சை உற்பத்திகளின் தேவையை அகற்றும்
    c) உற்பத்தி பொருட்களின் அகத்துறிஞ்சலை அதிகரிக்கும்
    d) சிகிச்சை தயாரிப்புகளின் கண்டிஷனிங் விளைவைக் குறைக்கும்

(02 x 50 = 50 புள்ளிகள்)

Wondershare PDFelement

அனைத்து உரிமைகளும் பெற்றது

# மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விஆணைக்குழு

## அறிவுசார் கணிப்பீடு – ஜூலை 2022

## அழகுக்கலை நிபுணர்

## தேசிய தொழிற்தகைமை மட்டம் 04

**நேரம்: 1 ½ மணித்தியாலங்கள்**

<u>பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்</u>

- ஏதேனும் ஐந்து (05) கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.
- வினாத்தாளில் வழங்கப்பட்டுள்ள இடங்களில் விடையளிக்கவும்.
- இவ் வினாதாள் 08 பக்கங்களைக் கொண்டுள்ளது.

---

## <u>பகுதி 2</u>

1.

i). முக ஒப்பனைக்கான படுக்கையினைத் தயார் செய்வதற்கான படிமுறைகளை எழுதுக? (2.5 புள்ளிகள்)

ii). வாடிக்கையாளருடனான ஆலோசனை சேவையின் போது நினைவில் வைத்திருக்க வேண்டிய மிகவும் பிரதானமான விடயங்கள் எவை? (2.5 புள்ளிகள்)

iii). “சொரியாசிஸ்” (psoriasis) இனை எவ்வாறு இனங்காணலாம் என விபரிக்குக? (2.5 புள்ளிகள்)

Wondershare PDFelement

Wondershare PDFelement

iv). முகப்பருக்கள் தோன்றக்கூடிய தோலிற்கு மேற்கொள்ளும் முகப்பராமரிப்பு முறையினை படிமுறை ஒழுங்கில் விபரிக்குக? (2.5 புள்ளிகள்)

2.

i). நகம் தொடர்பான நோய்கள் நான்கினைப் (4) பெயரிடுக?

(01 புள்ளிகள்)

ii). ஒவ்வொரு நக நோய்களையும் எவ்வாறு இனங்காணலாம் என விபரிக்குக?

(04 புள்ளிகள்)

Wondershare PDFelement

iii). உற்பத்திப் பொருள் ஒன்று அதன் காலாவதி திகதிக்கு முன்னர் பாவனைக்கு ஏற்றதற்றதாக மாறமுடியுமா? அவ்வாறெனில் அதனை எவ்வாறு இனங்காணலாம்?

(02 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iv). உயர் அதிர்வு இயந்திரத்தின் (high frequency machine) தொழிற்பாடுகளை விபரிக்குக? (03 புள்ளிகள்)

3.

i). சுகாதாரத்தினைப் பேணவேண்டியதன் அவசியம் யாது?

(01 புள்ளிகள்)

ii). ஒப்பனைக் கலைஞர் கட்டாயம் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய பிரதானமான தனிநபர் சுகாதார பிரச்சினைகள் ஐந்தினை (5) விபரிக்குக?

(2.5 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iii). முகத்தில் T-வலையம் (T-zone) என்பதனால் கருதப்படுவது யாது என்பதை சுருக்கமாக விபரிக்குக? (2.5 புள்ளிகள்)

Wondershare PDFelement

iv). முகத்திலுள்ள முடிகளை அகற்றும் போது மிக அதிக அளவில் கவனம் செலுத்த வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக விபரிக்குக? (04 புள்ளிகள்)

4.

i). அழகுநிலையம் ஒன்றில் உள்ள முதலுதவிப் பெட்டியில் காணப்பட வேண்டிய எட்டு (8) பொருட்களைப் பட்டியலிடுக? (02 புள்ளிகள்)

Wondershare PDFelement

ii). கிளென்சிங் மில்க் (cleansing milk) இன் 04 பயன்களையும் கிளென்சிங் லோஷனின் (cleansing lotion) 4 பயன்பாடுகளையும் பட்டியலிடுக? (02 புள்ளிகள்)

Wondershare PDFelement

iii). கிளென்சிங் மில்க் (cleansing milk) மற்றும் கிளென்சிங் லோஷன் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விபரிக்குக?

(03 புள்ளிகள்)

iv). கையின் கீழ்பகுதிக்கு மெழுகிடும் செயன்முறையினை (underarm waxing) சுருக்கமாக விபரிக்குக? (03 புள்ளிகள்)

Wondershare PDFelement

5.

i). பாதப் பராமரிப்பின் போது (pedicure) மேற்கொள்ளப்படும் நான்கு (4) மசாஜ் அசைவுகளைப் பெயரிடுக? (02 புள்ளிகள்)

ii). மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு மசாஜ் அசைவையும் விளக்குக?

(04 புள்ளிகள)

Wondershare PDFelement

iii). நீரை அடிப்படையாகக் கொண்ட ஒப்பனைப் பொருட்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் விளக்குக? (02 புள்ளிகள்)

iv). விற்றமின் A எவ்வாறு தோலிற்கு உதவி செய்கின்றது? (02 புள்ளிகள்)

Wondershare PDFelement

6.

i). தோலின் வகைகளிற்கு ஏற்ப மூன்று (3) ஈரலிப்பாக்கிகளைப் பெயரிடுக? (1.5 புள்ளிகள்)

ii). மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு ஈரலிப்பாக்கியினதும் பயன்களை விளக்குக? (03 புள்ளிகள்)

Wondershare PDFelement

iii). தொற்றுநீக்கலின் இரண்டு படிநிலைகளைப் பெயரிட்டு விளக்குக?

(03 புள்ளிகள்)

iv). சூரிய வெளிச்சம் படுவதனால் ஏற்படக்கூடிய மூன்று தோல் நிலைமைகளை பெயரிட்டு சுருக்கமாக விபரிக்குக?

(1.5 புள்ளிகள்)

Wondershare PDFelement

7.

i). வாடிக்கையாளருடன் தொடர்பாடலினை மேற்கொள்ளும் போது கடைப்பிடிக்க வேண்டிய தொலைபேசி ஒழுங்குமுறைகள் (4) நான்கினைப் பெயரிடுக?

(02 புள்ளிகள்)

ii). புதிய அழகுக்கலை நிலையம் ஒன்றினை ஆரம்பிக்கும் போது கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் நான்கினைப் பெயரிடுக?

(02 புள்ளிகள்)

Wondershare
PDFelement

iii). அழகுநிலையம் ஒன்றிற்கான விளம்பரப்படுத்தல் மற்றும் வியாபார ஊக்குவிப்பு நுட்பங்கள் தொடர்பாக சுருக்கமாக விபரிக்குக?

(03 புள்ளிகள்)

iv). அரச வர்த்தக ஒழுங்குமுறைகள் தொடர்பாக சுருக்கமாக விபரிக்குக?

(03 புள்ளிகள்)

Wondershare
PDFelement